## 41 ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கல்!

# ரூ.61.44 கோடியில் 8 சமூக நீதி விடுதிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்!

சென்னை, செப். 24 -

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.9.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் 3 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், சமூகநீதி பள்ளி மாணவர் விடுதிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 61 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்படவுள்ள 8 சமூகநீதி விடுதிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1969-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தையும், 1989-ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தையும், 2007 - ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்ககத்தையும் ஏற்படுத்தினார். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினரின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி, அம்மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிட கல்வி உதவித் தொகை வழங்குதல், புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் சமூக நீதி கொள்கைகளை நிறுவுவதிலும், அதனை செயல்படுத்து வதிலும் தமிழ்நாடு நாட்டிற்கே முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

மதுரை மாவட்டம், வி.பெருமாள்பட்டி அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிக்கு 1.77 கோடி ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் அரியலூர் மாவட்டம், மீன்சுருட்டியில் 2.17 கோடி ரூபாய் செலவில் 50 மாணவர்கள் தங்கி கல்வி பயிலும் வகையில் சமூகநீதி பள்ளி மாணவர் விடுதிக் கட்டடம்;

**என மொத்தம் 3 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.**

**அடிக்கல் நாட்டப்பட்ட புதிய திட்டப் பணிகளின் விவரங்கள்**

சென்னை, இராணிமேரி கல்லூரி வளாகத்தில் 26.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம், செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் 5.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் 3.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூகநீதி இசைக்கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம், ஒரத்தநாட்டில் 7.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதி-II கட்டடம், ஒரத்தநாட்டில் 5.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதி -I கூடுதல் கட்டடம், தஞ்சாவூரில் 5.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதி கூடுதல் கட்டடம், மதுரை மாவட்டம், சாத்தமங்கலத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூகநீதி கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம் மற்றும் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 2.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூகநீதி கல்லூரி மாணவர் விடுதிக்கு கூடுதல் கட்டடம்;

**என மொத்தம் 61.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 1050 மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் வகையில் 8 சமூக நீதி விடுதிக் கட்டட கட்டுமானப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.**

**பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

அரசு கள்ளர் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் நலன் கருதி ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 23 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 18 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் 10 ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசுச் செயலாளர் எ.சரவணவேல்ராஜ், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் திருமதி. வ.கலையரசி, பிற்படுத்தப்பட் டோர் நல ஆணையர் முனைவர் சீ.சுரேஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாணவிக்கு கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட கல்வி உதவி தொகைக்கான காசோலையை மாவட்டக் கழகச் செயலாளரும் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, அமைச்சருமான சு.முத்துசாமி தனது முகாம் அலுவலகத்தில் மாணவியின் பெற்றோரிடம் வழங்கினார். நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், இரா.நித்தின், மாணவரணி மணி, சிவா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## சேலம் மாவட்டம் - பைரோஜி அக்ரஹாரம் குரூப் கிராமத்தில்

# குட்டையில் மூழ்கி உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 24 -

சேலம் மாவட்டம், பைரோஜி அக்ரஹாரம் குரூப் கிராமத்தில் குட்டையில் மூழ்கி உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்ததுடன் நிதியுதவி வழங்கவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், பைரோஜி அக்ரஹாரம் குரூப் கிராமத்தில் உள்ள அரசம்பாளையம் மலை அடிவாரத்தில் 20.9.2025 அன்று பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் மழைநீர் தேங்கியுள்ள குட்டையில் குளித்துக் கொண்டிருந்த நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், மின்னக்கல் கிராமத்தில் வசிக்கும் சுப்பிரமணி என்பவரின் மகன்கள் நிஷாந்த் (வயது 23) மற்றும் பிரசாந்த் (வயது 19) ஆகிய இருவரும் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்த னர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இம்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதல மைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தீயணைப்புத்துறை - காவல்துறை சார்பில் புதிய கட்டடங்கள்

# தமிழ்நாடு முழுவதும் 342 காவலர் குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, செப். 24 -

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.9.2025) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், காலவாக்கத்தில் ரூ.21 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாநில பயிற்சிக் கழகத்திற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், காவல்துறை சார்பில் ரூ.97 கோடியே 65 இலட்சத்து 61 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 342 காவலர் குடியிருப்புகள் 2 காவல் நிலையங்கள், 6 காவல் துறைக் கட்டடங்கள் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு ரூ.1 கோடியே 4 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ள புதிய மண்டல அலுவலகம் மற்றும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூ.2 கோடியே 12 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் கட்டித் தருதல், பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தருதல், பல்வேறு நவீன கருவிகள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளை வழங்குதல் போன்ற பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

**செங்கல்பட்டு மாவட்டம், காலவாக்கத்தில் கட்டப்படவுள்ள மாநில பயிற்சி கழகத்திற்கு அடிக்கல் நாட்டுதல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் பயிற்சி வசதிகளை நவீனப்படுத்தும் நோக்கில் செங்கல்பட்டு மாவட்டம், காலவாக்கத்தில் ரூ.21.85 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாநில பயிற்சி கழகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த மாநில பயிற்சி கழகம், 300 பயிற்சியாளர்கள் தங்கும் வகையிலான தங்கும் கூடங்கள் (Dormitories), பயிற்சி மைதானம் (Parade ground), சமையற்கூடம் (Kitchen cum dining halls), மாதிரி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம், மின்வசதி, சாலை வசதி, கழிவுநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

**காவல்துறை சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

இராமநாதபுரம் மாவட்டம் - சக்கரக்கோட்டை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை

12ஆம் அணி வளாகத்தில் ரூ.55 கோடியே 66 இலட்சத்து 78 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 342 காவலர் குடியிருப்புகள்;

செங்கல்பட்டு மாவட்டம் - ஓட்டேரியில் ரூ.2 கோடியே 15 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் - நாச்சியார்கோவிலில் ரூ.2 கோடியே 65 இலட்சத்து 96 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம்;

இராமநாதபுரம் மாவட்டம் - சக்கரக்கோட்டை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை 12ஆம் அணி வளாகத்தில் ரூ.34 கோடியே 3 இலட்சத்து 25 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள நிர்வாகக் கட்டடம், ஆயுத கிடங்கு மற்றும் 3 பாசறைகள் மற்றும் சென்னை மாவட்டம் - எழும்பூரில் உள்ள பழைய காவல் ஆணையர் வளாகத்தில் ரூ.3 கோடியே 14 இலட்சத்து 62 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள குதிரை இலாயங்கள்;

**என மொத்தம் ரூ.97 கோடியே 65 இலட்சத்து 61 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 342 காவலர் குடியி ருப்புகள், 2 காவல் நிலையங்கள் மற்றும் 6 காவல் துறைக் கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.**

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மத்திய மண்டலத்தை இரண்டாகப் பிரித்து ரூ.1.04 கோடி செலவில் விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள புதிய மண்டல அலுவலகம் மற்றும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டவாறு சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூ.2.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொ) ஜி.வெங்கடராமன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்வினித் தேவ் வான்கேடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





தஞ்சை வடக்கு மாவட்டத்தில் நடைபெற்ற ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானம் ஏற்பு பொதுக்கூட்டத்தில், கரூர் முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கரங்களால் சிறந்த மாநகராட்சி செயலாளர் விருது பெற்ற கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் தனக்கு அளிக்கப்பட்ட ரூ.1 இலட்ச ரூபாயை கழக மூத்த முன்னோடிகளுக்கு தலா 10 ஆயிரம் வீதம் 10 நபர்களுக்கு முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.



தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் மொட்டலூர் ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ நிகழ்ச்சியில் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி கலந்து கொண்டு அன்று பெறப்பட்டு அன்றே தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் எம்.வீடி.கோபால், அடிலம்.அன்பழகன், தொகுதி பார்வையாளர் அரியப்பன், பி.சி.ஆர்.மனோகரன் உள்ளிட்ட தி.மு.க.வினர், அரசு அலுவலர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வாட்ஸ் ஆப்பில் வலம் வருபவை!

# தி.மு.க.வை ஏன் ஆதரிக்குறேன்னு தெரியுமா சார்?




கீழடி அகழ்வாராய்ச்சியில் மண்ணைத் தோண்டி,
5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை பயன்படுத்திய தமிழன்,
இந்தியாவுக்கே முன்னோடி என்று தரவுகளோடு சொன்ன திராவிட மாடல் தி.மு.க. அரசின் அடுத்த பாய்ச்சல் கடலுக்குள்ளே...

ஆம்
மண்ணுக்குள் மட்டுமில்ல
அடுத்ததாக
ஆழ்கடலிலும் ஆராயப்படும் தமிழர் வரலாறு...

இந்தியாவிலேயே முதல் முறையாக,

மூவேந்தர் காலத்திலும்,
சங்க இலக்கியத்திலும், சங்ககாலத்திற்கும் பின்னான காப்பியங்களிலும் சிறப்பித்துக் கூறப்படும் மிகப்பெரும் கடல் வாணிபத் துறைமுகமாக இருந்த காவிரிப்பூம்பட்டினம்,

இன்றைய
மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள “பூம்புகாரில்”,
பழந்தமிழ் நாகரிகத்தின் தொன்மையை கண்டுணர்ந்து ஆராயும் பொருட்டு,
இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், ஆய்வுப் பணிகள் தொடங்கியிருக்கிறது திராவிட மாடல் தி.மு.க. அரசு...

தமிழன் கால் பட்ட இடமெல்லாம் வெறும் தடம் அல்ல வரலாறு,
மறைக்கப்பட்ட அந்த வரலாறை பிசிறில்லாம கண்டுப்புடிச்சி உலகுக்கு அறிவிப்பது
திராவிட மாடல் தி.மு.க. அரசு...

தமிழ்
தமிழர் வரலாற்றை மீட்டெடுப்பதும்
காப்பதும்
தி.மு.க. தான்
தி.மு.க. மட்டுந்தான்...

அதனால தான் சார் தி.மு.க.வை புடிக்கும்...